# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2243 - 2021 අගෝස්තු මස 27 වැනි සිකුරාදා - 2021.08.27

*2243 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாண சபை

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | 1052 |
| துணைவிதிகள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2021, செத்தெம்பர் மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2021, செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# துணை விதிகள்

## குருநாகல் மாநகர சபை

குருநாகல் மாநகர சபை அதிகாரப் பிரிவினுள் விரும்பத்தகாத, ஆபத்துடைய, விரும்பத்தகாததும் ஆபத்துடையதுமான வியாபாரத்தினை முறைப்படுத்தல் பற்றிய துணை விதி

*252 ஆம் அத்தியாயமாகிய 1947 ஆம் ஆண்டின் 16 ஆம் இலகத்திற்கான மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 267 ஆம் பிரிவில் (1) ஆம் உப பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய உரிய கட்டளைச் சட்டத்தின் 272 (15) ஆம் உப பிரிவினால் மாநகர சபைக்கு கிடைக்கப் பெற்றுள்ள அதிகாரப்படி குருநாகல் மாநகர சபையினால் ஒழுங்கமைக்கப்பட்டதும் 2020.07.16 ஆந் திகதி நடாத்தப்பட்ட உரிய மாநகர சபையின் GC - 6(19) 2020.07.16 ஆம் இலக்கத்திற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதுமான இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள குருநாகல் மாநகர சபை அதிகாரப் பிரிவினுள் விரும்பத்தகாத, ஆபத்துடைய, விரும்பத்தகாததும் ஆபத்துடையதுமான வியாபாரத்தினை முறைப்படுத்தல் பற்றிய துணை விதி 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கத்திற்கான மாகாண சபை (இணையான ஒழுங்கு விதிகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய மேலே காட்டப்பட்டுள்ள மாநகர சபைச் சட்டத்தின் 268 ஆம் பிரிவில் (1) ஆம் உப பிரிவின்படி வடமேல் மாகாணத்தின் ஆளுநர் ராஜா கொல்லுரே ஆகிய என்னால் அனுமதிக்கப்பட்டது பற்றி இத்துடன் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.*

ராஜா கொல்லுரே,
ஆளுநர்,
வடமேல் மாகாணம்.

குருநாகல்,
*2021, யூன் 10.*

### குருநாகல் மாநகர சபை பிரதேசத்தினுள் ஆபத்துடையதும் விரும்பத்தகாததும் மற்றும் ஆபத்தானதும் விரும்பத்தகாத வியாபாரங்களை முறைப்படுத்தல் பற்றிய துணை விதி

*துணை விதிகளுக்கான சட்ட விதிகள்*

1. மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 267 (1) ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 272 (15) உப பிரிவின் கீழ் மாநகர சபைக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி இவ் விதி அமைக்கப்பட்டுள்ளது.

*விடயம் மற்றும் நோக்கம்*

2. அதிகாரப் பிரதேசத்தினுள் பொது மக்களின் நல்லுபயோக வசதியும் நலன்புரி மற்றும் எல்லா வசதிகளையும் பாதுகாத்தலின் கீழ் ஆபத்துடையதும் விரும்பத்தகாததும் மற்றும் ஆபத்தானதும் விரும்பத்தகாத வியாபாரங்களை முறைப்படுத்தல் மேற்பார்வை செய்தல், கட்டணம் அறவிடல் மற்றும் நிருவகித்தலின் பற்றிய துணை விதி என்று இந்த துணை விதியில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

*துணை விதியின் பெயர் நோக்கங்கள்*

3. குருநாகல் மாநகர சபை அதிகாரப் பிரிவு ஆபத்துடையதும் விரும்பத்தகாததும் மற்றும் ஆபத்தானதும் விரும்பத்தகாத வியாபாரங்களை முறைப்படுத்தல் மேற்பார்வை செய்தல், கட்டணம் அறவிடல் மற்றும் நிருவகித்தலின் பற்றிய துணை விதி என்று இந்த துணை விதியினை அறிமுகப்படுத்தப்படும்.

4. எவரொருவருக்கோ மாநகர சபையினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணைக்கு காட்டப்பட்டுள்ளதும் உரிய முறையில் வர்த்தமானியில் பிரசித்தப்படுத்தப்பட்ட ஆபத்துடையதும் விரும்பத்தகாததும் மற்றும் ஆபத்தானதும் விரும்பத்தகாத வியாபாரங்களை நடாத்திச் செல்வதற்காக குருநாகல் மாநகர சபையின் சபை முதல்வரினால் வழங்கப்படுகின்ற அங்கீகரிக்கப்பட்ட உரிமப் பத்திரம் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

5. மா நகர சபை அதிகாரப் பிரிவினுள் பிரதேசத்தினுள் எந்தவொரு ஆபத்துடையதும் விரும்பத்தகாததும் மற்றும் ஆபத்தானதும் விரும்பத்தகாத வியாபாரங்களை கொண்டு நடாத்திச் செல்வதற்கான உரிமப்பத்திரம் கோரும் போது எதிர்பார்க்கப்பட்டுள்ள கட்டிடம் அல்லது சுற்றாடலுக்கு கீழ்க் காணப்படும் நிபந்தனைகளை பூரணப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும் :-

i. தற்போது அதிகாரப்படுத்தப்பட்டுள்ள சட்டத்திற்கு அமைய மாநகர சபையின் திட்டமிடல் குழுவினால் அனுமதிக்கப்பட்ட திட்டத்திற்கு அமைய உறுதியானதும் எதிர்பார்க்கப்பட்டுள்ள அளவிலான நுகர்வோருக்கு வசதிகளை அளிக்கக்கூடிய வகையில் இடவசதியுடையதும் ஆபத்தான மற்றும் பாதிப்பில்லாததாகவும் இருத்தல் வேண்டும் ;

ii. தற்போது அதிகாரப்படுத்தப்பட்டுள்ள சட்டத்திற்கு அமைய எல்லா பகுதியிலும் அமைந்துள்ள அறைகளது சுவர்கள் உகந்த பொருட்களினால் 2.14 மீற்றரிற்கு பார்க்கிலும் குறையாத உயரத்தில் கட்டமைக்க வேண்டியதுடன் அச்சுவர்களின் உட்புறத்தில் குறைந்த பட்சம் கீழ்ப் பகுதியில் இரண்டு மீற்றர் சீமெந்து பயன்படுத்தி சாந்து பூசி பீங்கான் கல் பொறுத்தப்பட்டிருப்பதுடன் உள் பகுதியில் மீதிப் பகுதி சுண்ணாம்பு பூசப்பட்டிருப்பது போதுமானதாகும் ;

iii. மாநகர சபையினால் காலத்திற்கு காலம் விதிக்கப்படுகின்ற தரத்திற்கு அமையும் வண்ணம் வடிகால்வாய் தொடர்கள் முழு சுற்றாடலிலும் அமைதல் வேண்டும் ;

iv. மாநகர சபையில் திண்மக் கழிவுப் பொருட்களை ஒன்று சேர்க்கும் வேலைத் திட்டத்திற்கு பொருத்தமான ஆரம்பத்திலிருந்து மூலப் பொருட்களை வேறுபடுத்தும் அலுவலினை வசதிப்படுத்தும் வகையில் சுகாதார பாதுகாப்பு குப்பைக் கூலங்களை ஒன்று சேர்க்கும் பாத்திரம் சூழலினுள் வைக்கப்பட்டிருப்பதுடன் மாநகர சபையினால் காலத்திற்கு காலம் விதிக்கப்படுகின்ற தரத்திற்கு அமையும் வகையில் போதுமான அளவில் மலசலகூட வசதிகள் சூழலில் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும் ;

v. மாநகர சபையின் சிபாரிசு செய்யப்படுகின்ற தரத்திற்கு அமைய தீ பாதுகாப்பு உபகரணம் அல்லது தீ பாதுகாப்பு வழிமுறைகள் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும் ;

vi. மேலே காட்டப்பட்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது பற்றி சுகாதார வைத்திய உத்தியோகத்தரது சிபாரிசினை பெற்றிருத்தல் வேண்டும்.

6. எல்லா உரிமப்பத்திரதாரியினாலும் கீழ்க் காணப்படும் விடயங்களை பூரணப்படுத்தப்படல் வேண்டும் :-

i. எல்லா உரிமப் பத்திரதாரியினாலும் தமது வியாபாரத்தினை கொண்டு நடாத்திச் செல்வதற்கு தேவையான பொருட்கள் எவ்வித துர்நாற்றமும் அல்லது எவ்வித தீங்கையும் ஏற்படுவதனை தடுக்கும் வகையில் களஞ்சியப்படுத்தல் வேண்டும் ;

ii. எவ்வகையினாலோ தீங்கு அல்லது துர்நாற்றம் ஏற்படுத்தக்கூடிய பொருட்களை பொது இடங்களில் அல்லது தெருக்களில் கொண்டு செல்லும் போது அவற்றினால் பொது மக்களுக்கு எவ்வித தீங்கும், துர்நாற்றம் ஏற்படாத வகையில் அவற்றை மூடப்படும் ஈரளிப்பு ஏற்படாத வகையில் பாத்திரங்களில் இட்டு கொண்டு செல்லல் வேண்டும் ;

iii. எல்லா உரிமப்பத்திரதாரியினாலும் எந்த வகையிலானதோ உற்பத்தியின் போது வெளியேற்றப்படும் எவ்வகையிலானதோ விரும்பத்தகாத ஆவியோ வாயு அழிவினையோ ஏற்படுத்தும் விரும்பத்தகாத பெறுபேறினை ஏற்படுத்தாதவாறு அவை பரவலடையும் வகையில் உயரத்தில் விடுவித்தல் அல்லது நகர பிரதான சுகாதார வைத்திய உத்தியோகத்தரது சிபாரிசின்படி நேரடியாக தீ மூட்டுதல் அல்லது மின் தேக்கியினுள் அனுப்புதல் வேண்டும் ;

iv. எல்லா உரிமப்பத்திரதாரியினாலும் உரிய வியாபாரத்தினை கொண்டு நடாத்தும் சூழலிற்காக போதியளவிலான வடிகால்வாய் தொடரினை அமைத்து அவற்றை சுத்தம் செய்வதற்கு பொறுப்பேற்றல் வேண்டும். இன்னும் குறித்த வடிகால்வாய் தொடர் மற்றும் வியாபாரத்தினைக் கொண்டு நடாத்திச் செல்கின்ற சூழலின் நிலம் உரியவாறு பராமரித்து சுத்தமாக வைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் ;

v. எல்லா உரிமப்பத்திரதாரியினாலும் வியாபாரத்தினை கொண்டு நடாத்தும் சூழலில் சுவர், குப்பைகளை உறிஞ்சிக் கொள்வதை தடுக்கின்ற வகையில் உகந்த நிலையில் கொண்டு நடாத்த வேண்டியதுடன் அவற்றிற்கு ஆண்டு தோறும் வர்ணம் பூசப்படல் வேண்டும் ;

vi. எல்லா உரிமப்பத்திரதாரியினாலும் உரிய வியாபாரம் சம்பந்தமான உபகரணம் மற்றும் பாத்திரம் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டியதுடன் தினசரி சுத்தம் செய்ய வேண்டும் ;

vii. எல்லா உரிமப்பத்திரதாரியினாலும் கழிவுப் பொருளும் இடைநிலை உற்பத்தியுடன் வெளியேற்றப்படும் எல்லா பொருட்கள், பெருக்கி வெளியேற்றப்படுபவைகளும் கீறலினால் மீதியாகிய பகுதிகள், அச்சூழலில் மேலும் வியாபார நடவடிக்கைகளுக்கு உடனடியாக உபயோகிக்கப்படாவிட்டால், தினமும் பாதுகாப்பான பாத்திரங்களில் இட்டு வெளியேற்றல் வேண்டும் ;

viii. எல்லா உரிமப்பத்திரதாரியினாலும் வியாபார நடவடிக்கைக்காக பயன்படுத்தி வெளியேற்றப் படுகின்ற நீர் தற்போது காணப்படுகின்ற சட்ட திட்டங்களுக்கு அமைய நீரினை முறையாக வெளியேற்ற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

7. உரிமப்பத்திரம் பெற்ற சூழலினுள் வருகைத் தரும் பொது மக்களுக்கு மற்றும் நுகர்வோருக்கு வாசிக்க முடிந்தளவிற்கு வியாபார உரிமப்பத்திரத்தினை காட்சிப்படுத்தல் வேண்டும்.

8. எல்லா உரிமப்பத்திரதாரியினாலும் தமது வியாபார தன்மைக்கு உரித்தாகும் வகையில் தமது பணியாளர்களுக்காக பாதுகாப்பு கவசம் வழங்குதலும் பயன்படுத்துவதற்கும் அவ்வாறு செயல்படுவது பற்றி உரிமப்பத்திரதாரி பொறுப்பு கூறுதல் வேண்டும்.

9. நகர ஆணையாளரினால் குறித்த வேலைக்காக வழங்கப்பட்ட செல்லுபடியான உரிமப்பத்திர தாரியினால் அன்றி எவர் ஒருவர் மாநகர சபை அதிகாரப் பிரதேசத்தினுள் ஆபத்துடையதும் விரும்பத்தகாததும் மற்றும் ஆபத்தானதும் விரும்பத்தகாத வியாபாரங்களை கொண்டு நடாத்தலாகாது.

10. எந்த உரிமப்பத்திரதாரியினாலும் எந்த கங்கை, போக்குவரத்து, வெட்டப்பட்ட நீர் வழி, நீர் ஊற்று, கிணறு, குளம், கால்வாய்கள், கடல் அல்லது எந்தவொரு நீர் நிலைக்குள் அல்லது அசுத்த துர்நாற்றமுள்ள அல்லது சுத்தமற்ற நீர் அல்லது மற்றைய நீர் ஓடுவதற்கு செய்வதனால் அல்லது விடுவித்தலினால் அல்லது ஏதாவதொரு அசுத்த மூலப் பொருள் கழுவுவதனால் அல்லது ஏதாவதொரு வகையில் உரிய கங்கை நீரோட்டம், வெட்டப்பட்ட நீர் வழி, நீர் ஊற்று, கிணறு, குளம், கால்வாய்கள், கடல் அல்லது எந்தவொரு நீர் நிலைகளை அசுத்தப்படுத்தலாகாது.

11. இத்துணை விதியின் சட்டதிட்டங்களின் கீழ் வழங்கப்பட்ட உரிமப்பத்திரத்தில் காட்டப்பட்டுள்ள வியாபாரத்திற்கு மேலதிகமாக பிரதேச சபையினால் உரிய வியாபாரத்திற்காக வெவ்வேறாக உரிமப் பத்திரம் பெற்றுக் கொள்ளாது வேறு வியாபாரம் ஒன்றினை கொண்டு நடாத்தலாகாது.

12. அவ்வியாபாரத்தில் சேவை செய்கின்ற சேவையாளர் தொற்று அல்லது தொற்று நோயினால் அவதிப்படுகின்றவர் அல்லது தொற்று நோயினால் அவதிப்படுகின்ற ஒருவருக்கு பரவுகின்ற காலத்தினுள் பராமரிப்பாளராக இருந்திருக்கலாகாது.

13. இங்கு முதலாவது, இரண்டாவது, மூன்றாவது உப அட்டவணையில் உட்படுத்தப்பட்டுள்ள வியாபாரங்களுக்கு மேலதிகமாக காலத்திற்கு காலம் அடையாளம் காணப்படும் வியாபாரத்தினை வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் வியாபாரம் ஆபத்துடையதும் விரும்பத்தகாததும் மற்றும் ஆபத்தானதும் விரும்பத்தகாத என்று உறுதியாக குறிப்பிட்டு மாநகர சபையின் பிரேரணையின் மூலம் அறிவித்தலுக்கு உட்படுத்தல் மாநகர சபையின் அலுவலாகும்.

14. துணை விதியில் ஒரு பிரிவினை மீறல் மாநகர சபையினால் அதனை சரி செய்வதற்கு அறிவிக்கும் காலத்தினை நீடிக்க முடிந்தது உரிமப்பத்திரதாரியினால் செய்யப்படும் ஏற்றுக்கொள்ளக் கூடிய சாதாரண எழுத்து மூலமான கோரிக்கை விடுத்தலினால் நகர ஆணையாளரினாலாகும். அக் காலம் 14 நாட்களுக்கு மேற்படலாகாது.

15. மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட இத்துணை விதிகளில் குறிக்கப்பட்டுள்ள வியாபாரத்திற்காக ஏதாவதொரு சூழல் அல்லது இடத்தினை உபயோகிப்பதற்கு அதிகாரம் வழங்கி

மாநகர சபையினால் வழங்கப்பட்ட ஏதாவதொரு உரிமப்பத்திரம் சம்பந்தமாக மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 247(அ) ஆம் பிரிவின் கீழ் கட்டணம் அறவிடுவதற்கு அதிகாரம் இருப்பதுடன் உரிய கட்டணம் 247 ஆம் பிரிவின் கீழ்க் காட்டப்பட்டுள்ள கட்டணத்தினை மீறி உரிமப்பத்திரக் கட்டணம் அறவிடுவதற்கு மாநகர சபைக்கு அதிகாரம் உண்டு.

16. இந்த துணை விதியின் கீழ் வழங்கப்படுகின்ற எல்லா உரிமப் பத்திரமும் இந்த துணை விதியின் சட்ட திட்டங்களினால் காலம் கடக்கும் முன் இரத்து செய்யாது விடின் அந்த உரிமப்பத்திரம் வழங்கப்பட்ட ஆண்டில் திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரை செல்லுபடியாகும்.

17. இத் துணை விதிகளுக்கு உரிய சட்ட திட்டங்களை செயற்படுத்தல் பற்றி பரீட்சித்தல் மற்றும் மேற்பார்வை செய்யும் அதிகாரம் மாநகர சபையின் ஆணையாளரினால் அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தருக்காகும்.

18. பரீட்சிக்கும் செயற்திட்டம் மற்றும் பரீட்சிக்கும் செய்முறை மற்றும் செயல்பாட்டு மேற்பார்வை மாநகர சபையினால் காலத்திற்கும் காலம் தீர்மானிக்கப்படுவதுடன் அதற்காக உரிமப்பத்திரதாரி தேவையான வசதிகளை வழங்குதல் வேண்டும்.

19. துணை விதி ஒன்று அல்லது துணை விதிகளை மீறுவது அல்லது மீறலின் போது நகர முதல்வருக்கு அல்லது உரிய அதிகாரிகளுக்கு எழுத்து மூலம் அல்லது பேச்சு மூலம் எச் சந்தர்ப்பத்திலும் அறிவித்தல் அல்லது முறைபாடு செய்வதற்கு எந்த ஒரு குடிமகனுக்கும் அல்லது நுகர்வோருக்கு உரிமை உண்டு. அவ்வாறான எல்லா முறைபாடுகள் பற்றியும் உரிய அதிகாரிகள் பரிசீலிக்க வேண்டியதுடன் 14 நாட்களினால் முறையீட்டாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

20. இத்துணை விதிகளில் உள்ளடங்கப்பட்டுள்ள சட்ட திட்டங்களில் ஒன்றை அல்லது சிலவற்றை அல்லது எல்லாவற்றையும் மீறுதல் குற்றமாகும்.

21. இந்த துணை விதிகளில் உள்ளடங்கியுள்ள எந்தவொரு சட்டதிட்டங்களை மீறுதல் பற்றி ஏதாவதொரு குற்றம் சம்பந்தமாக உரிய அதிகாரம் உள்ள நீதிமன்றத்தினால் குற்றத்திற்கு குற்றவாளியானதன் பின்பு உரிய குற்றம் சம்பந்தமாக மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 267(3) உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தண்டத்திற்கு உட்படுதல் வேண்டும். அது போன்று ஏதாவதொரு குற்றம் சம்பந்தமாக உரிய அதிகாரம் உள்ள நீதிமன்றத்தினால் குற்றத்திற்கு குற்றவாளியாகிய பின்பு மேற்கூறப்பட்டவாறு தண்டத்திற்கு உட்படுத்தப்பட்டவரினால் உரிய மீறலினை தொடர்ந்தும் செய்து கொண்டு செல்லும் சந்தர்ப்பத்தில் மேற்கூறப்பட்ட உப பிரிவில் குறிப்பிடப்பட்ட மேலதிக தண்டத்திற்கு உட்படுதல் வேண்டும்.

22. துணை விதி, இந்த துணைவிதியில் உட்படுத்தப்பட்டுள்ள சொல் சம்பந்தமாக வேறு வகையில் பொருள் எதிர்பார்க்காவிடின்,

"அதிகாரம் உள்ள உத்தியோகத்தர்" என்பது, விசேட அலுவலுக்காக மாநகர சபையினால் அல்லது முதல்வரினால் மற்றும்/அல்லது நகர ஆணையாளரினால் அல்லது எழுத்து மூலம் அதிகாரம் அளிக்கப்பட்ட எந்தவொரு உத்தியோகத்தரும் என்று கருத்துப்படும்.

"நகர முல்வர்" என்பது குருநாகல் மாநகர சபையின் நகர முதல்வர் என்று கருதப்படும்.

"உரிமப்பத்திரதாரர்" என்பது இங்கு காட்டப்பட்டுள்ள எந்தவொரு துணை விதியின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு உரிமப்பத்திரத்தினை பெற்றுக் கொண்டுள்ளதும் அவ்வாறான சூழலுக்காக பொறுப்பாளர் அல்லது முகாமையாளர் இருக்கின்ற அல்லது காலத்திற்கேற்ப அந்த சூழலினை நிருவகிக்கின்றவர் என்று கருதப்படும்.

"உரிமப்பத்திரதாரின் சூழல்" என்பது இங்கு காட்டப்பட்டுள்ள துணை விதியின் கீழ் உரிமப் பத்திரத்தினை வழங்கியுள்ள சூழல் என்று கருதப்படும்.

"பொது இடம்" என்பது எந்தவொரு பாதை, உட்பிரவேச பாதை, வீதி, ஒழுங்கை, நடை பாதை, பொது விளையாட்டரங்கு, பாதை ஒதுக்குபுறம், விளையாட்டு மைதானம், பொது கட்டிடம், பொது பிண அடக்கஸ்தளம், பஸ் தரிப்பிடம், புகையிரத நிலையம், கங்கை, கால்வாய், தாங்கி குட்டை, கடற்கழி, நீர்ப்பாசனம், குழாய் மழை நீர், கடற்கரை, நிறுவனத்திற்கு எந்தவொரு காணி, பொது நுகர்விற்காக ஒதுக்கப்பட்ட எந்தவொரு அரச காணி துண்டு அல்லது பொது மக்களினால் உபயோகிக்கப்படும் வேறு எந்தவொரு பொது இடம் என்று கருதப்படும்.

"நகர சுகாதார வைத்திய உத்தியோகத்தர்" என்பது பிரதேச சபை பிரதேசத்தினை உள்ளடக்கும் வகையில் நியமிக்கப்பட்டுள்ள பிரதேச சுகாதார சேவை பணிப்பாளர் என்று கருதப்படும்.

"சபை" என்பது குருநாகல் மாநகர சபை என்று கருதப்படும்.

"மாநகர சபை அதிகாரப் பிரிவு" என்பது குருநாகல் மாநகர சபையின் அதிகாரமுள்ள பிரதேசம் என்று கருதப்படும்.

"திட்ட குழு" என்பது குருநாகல் மாநகர சபையின் திட்ட குழு என்றும்,

"உகந்த பொருள்" என்பது செங்கல், கபொக், கருங்கல், சீமெந்துக் கல், கொன்கிறீட் ஆகிய பொருட்கள் என்று கருதப்படும்.

## I ஆவது அட்டவணை - விரும்பத்தகாத வியாபாரம்

1. ஈயம் சுத்தம் செய்தல் அல்லது களஞ்சியப்படுத்தல்
2. பசளை அல்லது இரசாயன பசளை உற்பத்தி செய்தல் அல்லது விற்பனைக்கு வைத்திருத்தல்
3. தோல் பதனிடல்
4. தோலை விற்பனைக்கு வைத்திருத்தல்
5. மிருக கட்டுப்பாடு (இறைச்சி, பால் அல்லது முட்டைக்காக)
6. மாசி தயாரித்தல்
7. இறப்பர் தயாரித்தல் அல்லது இறப்பர் ரொட்டி வைத்திருத்தல்
8. மிருக வைத்தியசாலையை நடாத்தல்
9. மொத்தமாக விற்பனைக்காக அழுகுகின்ற உணவு வகை அல்லது உணவு பொருட்களை வைத்திருத்தல்
10. கருவாடு, உப்பு மீன் அல்லது 150 கிலோ கிராமிற்கு மேற்பட்ட அளவிலான ஜாடி வைத்திருத்தல்
11. மீன் அல்லது இறைச்சி ஜாடியில் அல்லது உலர்த்தல் அல்லது ஐஸ் இடல்
12. சிரட்டைக் கரி அல்லது மரக்கரி உற்பத்தி செய்தல்
13. புகையிலை உலர்த்தல்
14. மிருக உணவு தயாரித்தல்
15. புண்ணாக்கு தயாரித்தல்
16. மிருக இறைச்சி அல்லது இரத்தம் கொதிக்க வைத்தல்
17. சவர்க்காரம் தயாரித்தல்
18. மிருக எலும்பு அரைத்தல் அல்லது வைத்திருத்தல்
19. டிரன்க் பெட்டி வடிவமைத்தல்
20. புதிய உலோகம் அல்லது பழைய உலோகம் வைத்திருத்தல்
21. உலோகக் கழிவு வைத்திருத்தல்
22. வீட்டு உபகரணம் வடிவமைத்தல்
23. பிரம்பு பொருட்களை வடிவமைத்தல்
24. தச்சு வேலைத்தளத்தைக் கொண்டு நடாத்தல்
25. சிரப் அல்லது பழச்சாறு தயாரித்தல்
26. இனிப்புப் பண்டம் தயாரித்தல்

27. தேங்காய் மட்டை ஊறவிடல் அல்லது பதனாக்கல்
28. தூரிகை வகைகளை தயாரித்தல் (பற்தூரிகை தவிர)
29. பற்தூரிகை தயாரித்தல்
30. கள் ஒன்று சேர்த்தல்
31. வினாகிரி தயாரித்தல்
32. மரம் கிழித்தல்
33. வர்ண பூச்சு, வார்னிஸ் அல்லது டிஸ்ரெம்பர் தயாரித்தல்
34. சோடா தயாரித்தல்
35. நார் சாயமிடல்
36. தோல் தயாரித்தல்
37. பழங்கள், மீன் அல்லது வேறு உணவுப் பொருட்களில் டின்களில் அடைத்தல்
38. கோப்பி, தானிய வகைகளை அரைத்தல்
39. பேக்கின் பவுடர் தயாரித்தல்
40. கேஸ் மென்டல் தயாரித்தல்
41. சாடி (பொட்) தயாரித்தல்
42. மெழுகுவர்த்தி தயாரித்தல்
43. கற்பூரம் தயாரித்தல்
44. எழுதும் மை, அச்சு செய்யும் மை அல்லது இஸ்ரென்சில் மை தயாரித்தல்
45. துணி துவைக்கும் நீலம் தயாரித்தல்
46. மெழுகு தயாரித்தல்
47. வாசனை திரவியம் தயாரித்தல்
48. பாடசாலை சுண்ணாம்பு கட்டி தயாரித்தல்
49. டயர் அல்லது டியுப் தயாரித்த்ல்
50. டயர் மீள் நிரப்பல்
51. டயர், டியுப் வொல்கனைசின் செய்தல்
52. சீமெந்து தயாரித்தல்
53. சீமெந்து பொருட்கள் அல்லது எஸ்பெஸ்டோஸ் சீமெந்து பொருட்கள் தயாரித்தல்
54. மண் கடதாசி தயாரித்தல்
55. பிளாஸ்ரிக் பொருட்கள் தயாரித்தல்
56. செங்கல் சுடல்
57. இயந்திர உதவியுடன் துணி நெசவு செய்தல்
58. அமிலம் தயாரித்தல் அல்லது மீண்டும் நிரப்புதல்
59. ஓடு தயாரித்தல்
60. பசளை, சுண்ணாம்பு அல்லது வேறு பொருட்களை இடப்பட்டிருந்த சாக்குகளை சுத்தம் செய்து விற்பனை செய்தல்
61. இயந்திர உதவியுடன் சீமெந்து கல் தயாரித்தல்

## II ஆவது அட்டவணை - ஆபத்துடைய வியாபாரம்

1. கருங்கல் தோண்டல் அல்லது உடைத்தல்
2. மரக்கறி எண்ணெய் தயாரித்தல்
3. தேங்காய் எண்ணெய் தயாரித்தல்
4. நெருப்புப் பெட்டி தயாரித்தல் அல்லது களஞ்சியப்படுத்தல்
5. மெதிலேடட் இஸ்பிரிட் தயாரித்தல்
6. தேயிலை பெட்டி தயாரித்தல்
7. தும்பு அல்லது வேறு நார் வகைகளை தயாரித்தல்
8. தும்பு அல்லது வேறு நார் வகைகளினால் பொருட்களை தயாரித்தல்
9. வைக்கோல் வைத்திருத்தல்
10. உபயோகித்த ஆடைகளை களஞ்சியப்படுத்தல்
11. ஆபரணம் உற்பத்தி செய்தல் அல்லது புனரமைத்தல்

12. இயந்திர உதவியுடன் பலகை வெட்டுதல்
13. முருகைக்கல், சுண்ணாம்புக் கல் தோண்டல்
14. இயந்திர உபகரணம் உபயோகிக்கும் தொழிற்சாலையை கொண்டு நடாத்தல்
15. வெற்று சாக்கு அல்லது வெற்று போத்தல் வைத்திருத்தல்
16. மிதி வண்டி அல்லது மோட்டார் சைக்கிள் புனரமைத்தல்
17. உபயோகித்த கடதாசி அல்லது பத்திரிகை வைத்திருத்தல்
18. காற்றாடி வர்ணமிடல்
19. வெடில் அல்லது பட்டாசு களஞ்சியப்படுத்தல்
20. உலோக கைத்தொழில் ஆயுதம் (இயந்திர உபகரணம், ஆயுத உபகரணம் தயாரித்தல்)

## III ஆவது அட்டவணை - விரும்பத்தகாததும் ஆபத்துடையதுமான வியாபாரம்

1. அப்பிரக ஈயம் சுத்தம் செய்தல்
2. இரசாயன பொருட்களை உபயோகித்து கருவா, ஏலம் அல்லது நார் ஒழுங்கமைத்தல்
3. ரைக்கிளின் செய்தல் அல்லது நிறமிடல்
4. துணி அச்சிடல் அல்லது நிறமிடல் அல்லது பத்திக் செய்தல்
5. மின் உபகரணங்களை பூசுதல்
6. எண்ணெய் அல்லது மிருக கொழுப்பு தயாரித்தல்
7. சுண்ணாம்பு கல் அல்லது முருகைக் கல் சுடுதல்
8. வெடிப் பொருட்களை அல்லது பட்டாசு தயாரித்தல்
9. மீன் எண்ணெய் தயாரித்தல்
10. வள்ளம் அமைத்தல்
11. பட்டரி மின்னேற்றல் அல்லது புனரமைத்தல்
12. உலோக வகைகளை பொருத்துதல்
13. மோட்டார் வாகனம் புனரமைத்தல்
14. மோட்டார் வாகனம் சேவை செய்தல்
15. இயந்திர உதவியுடன் உலோகம் துகள் செய்தல்
16. வார்ப்படக்களம் ஒன்றினை நடாத்திச் செல்லல்
17. மோட்டார் வாகன பாகம் பொருத்துதல்
18. பங்கச நாசினி, களைக் கொல்லி, பீடை நாசினி தயாரித்தல் அல்லது மீள் நிரப்பல்
19. கிருமி நாசினி உற்பத்தியும் நுளம்புச் சுருள் தயாரித்தலும்
20. நுளம்புச் சுருள் தயாரித்தல்

08 - 432

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.